**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS. No. 179/2019</u>**

நாள் 15.07.2025

DW2 – ராகவி

க/பெ – பிரேம்குமார்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2025.)**

**<u>4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் M.Com வரை படித்துள்ளேன். வாதி அலமேலுவுடன் நான் சுமூகமான உறவில் தான் இருந்து வருகிறேன் என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்யும் வரையில் நாங்கள் பேசிக்கொண்டு இருந்தோம். எனது அப்பா 2018–ம் ஆண்டில் இறந்த பிறகு தான் பிரச்சனை ஏற்பட்டது. நானும், வாதியும் நல்ல சுமூகமான உறவில் தான் இருந்து வருகிறோம் என்றும், இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 14.06.2019–ம் தேதியில் திருமணம் நடந்தது. எனது அப்பா இறக்கும் வரையில் தாவா சொத்தில் அவருக்குரிய பாகத்தை அவரே நேரடியாக நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். வாதி, 1–ம் பிரதிவாதி மற்றும் எனது தந்தை கே.சண்முகசுந்தரம், தெய்வகுஞ்சாரம் ஆகிய நான்கு பேரும் சேர்ந்து 4–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகிய இரண்டு நபர்களும் எனது தந்தை மூலம் தாவா சொத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விடப்பட்டதாக நான் சொல்வதை காட்டும் வகையில் வாடகை ஒப்பந்தம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பொது அதிகாரம் பற்றிய விபரமானது எனக்கு 2019–ம் ஆண்டில் தான் தெரிய

வந்தது. இந்த வழக்கில் 4,5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன்.

2. எனது எதிர்வழக்குரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி வா.சா.ஆ.9 பொது அதிகார பத்திரம் பற்றிய விபரம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறப்பதற்கு முன்பாக வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தை எழுதி வாங்கியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் 4–ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல், நானும் எனது தாயார் 2–ம் பிரதிவாதி ஆகிய நாங்களும் அந்த பொது அதிகார ஆவணத்திற்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தின் பேரில் அதனுடைய முகவர் 4–ம் பிரதிவாதி சின்னச்சாமி ஒரு பெரியசாமி என்பவருக்கு தாவா சொத்தை விற்பதாக 13.02.2014–ம் தேதியிட்ட பதிவு கிரைய உடன்படிக்கை ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை 16.07.2014–ம் தேதியில் ரத்து செய்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி வீதம் கிரைய உடன்படிக்கை மற்றும் கிரைய உடன்படிக்கை ரத்து பத்திரம் ஆகியவைகள் ஏற்பட்ட போது 1 முதல் 3 பிரதிவாதிகளான நாங்களும் மற்றும் வாதியும் ஆட்சேபிக்கவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகளான நாங்களும், வாதியும் 4–ம் பிரதிவாதிக்கு வாடகை ஒப்பந்த பத்திரம் என்று நினைத்து தான் கையொப்பம் போட்டதாக சொல்லி தான் வழக்காடி வருகிறோம் என்றால் சரிதான்.

3. 4–ம் பிரதிவாதி முகவராக இருந்து கிரைய உடன்படிக்கை ஆவணம் மற்றும் அதன் ரத்து ஆவணம் ஆகியவைகளை ஏற்படுத்தி

விட்ட பிறகு தான் 5–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்திற்கு எதிராக எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் 5–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்திற்கு எதிராக மட்டும் உள்நோக்கத்தோடு ஆட்சேபித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்து வருவதாக சொல்லும் பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகியோர் 5–ம் பிரதிவாதி மூலம் வாடகைக்கு இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகிய இருவரும் மாத வாடகையை 5–ம் பிரதிவாதியிடம் தான் செலுத்திக்கொண்டு வருகிறார் என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 6,7 பத்தியில் பாலசுப்பிரமணியம் மற்றும் மகாலிங்கம் ஆகிய இருவரும் எனது அப்பா இறக்கும் காலம் வரையில் வாடகையை எனது அப்பாவிடம் கொடுத்து வந்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 வங்கி கணக்கு விபரப்பட்டியலில் மகாலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் மாத வாடகையை செலுத்தியதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பி.வா.சா.ஆ.6 வங்கி பரிவர்த்தனையில் 1–ம் பிரதிவாதி குமார் மற்றும் எனது கணவர் பிரேம்குமார் ஆகிய இருவரும் பணம் அனுப்பியதாக தான் பரிவர்த்தனைகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் நான் 1–ம் பிரதிவாதிக்கு பணம் அனுப்பியதற்கான பரிவர்த்தனையும் பி.வா.சா.ஆ.6 வங்கி கணக்கு விபரப்பட்டியலில் உள்ளது என்றால் இல்லை. அதில் ஒரே ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகாலிங்கம் என்பவருக்கும் இந்த வழக்கு சொத்தில் 5–ம் பிரதிவாதியால் வாடகைக்கு வைத்துள்ள மகாலிங்கம் என்பவருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. மகாலிங்கம் என்ற

பெயரில் ஒற்றுமையை வைத்துக்கொண்டு அக்கிரம லாபம் அடைய வேண்டி அந்த மகாலிங்கம் பெயர் கொண்ட வங்கி பரிவர்த்தனையை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா அவர் உயிரோடு இருந்து வந்த காலத்திலேயே தாவா சொத்தில் அவருக்கு இருந்து வந்த உரிமையை 4–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணம் மூலம் எழுதி கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொது அதிகார ஆவணத்தின் பேரில் தான் 4–ம் பிரதிவாதி தாவா சொத்தை 5–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.13 16.07.2014–ம் தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்து பாத்தியப்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து உரிமையற்ற நிலையில் நாங்கள் வழக்கு நடத்த நாங்கள் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் எனது அப்பா அவருக்கு தாவா சொத்தில் இருந்து வந்த உரிமையை பொறுத்து வரக்கூடிய பிரதிபிரயோஜனத்தை அவரது தாயார் தெய்வகுஞ்சாரம், வாதி மற்றும் 1–ம் பிரதிவாதியோடு சேர்ந்து பெற்றுக்கொண்டு விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

4. தற்போது வழக்கு சொத்தின் மதிப்பு கூடி விட்டதால் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு எனது அத்தையை வாதியாகவும், நாங்கள் 1 முதல்3 பிரதிவாதிகளாக இருப்பதாக நீதிமன்றத்தை நம்ப வைத்து வழக்கை பொய்யாக நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது அப்பாவிற்குரிய விகிதாச்சார பங்கு சொத்திற்கு எதிராக பொது அதிகார ஆவணத்தையோ, அந்த பொது அதிகார ஆவணத்தின் பேரில் 5–ம் பிரதிவாதி பெயருக்கு 4–ம் பிரதிவாதி மூலம் எழுதிகொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தையும் செல்லாது என்று அறிவிக்க கோரி எதிர் கோரிக்கை பரிகாரம் எதுவும்

நாங்கள் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் இருப்பதாக சொல்லி எவ்வித பாகப்பிரிவினை பரிகாரமோ கோரவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 10–ல் எனது சித்தப்பா 1–ம் பிரதிவாதி குமார், எனது அத்தை வாதி அலமேலு மற்றும் எனது வசமும் தாவா சொத்தின் அனுபவம் இருந்து வருவதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 5–ம் பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்று தனித்த அனுபவத்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 5–ம் பிரதிவாதி தான் வரிவிதிப்புகளை செலுத்திக்கொண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆகிய நாங்களோ, வாதியோ அனுபவித்தில் இருந்து வந்தது கிடையாது என்றும், 5–ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் தனித்த அனுபவித்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் வாதியின் வழக்கை வலுப்படுத்தும் வகையில் பொய்யாக தாக்கல் செய்துள்ள எனது பிரமாண வாக்குமூலம் நிராகரிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.15 15:51:04 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**